முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை திருமதி. பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,
முதன்மை உதவி அமர்வு நீதிபதி.

அ.சா. 7 தேதி.25.04.2024

| | | | |
|---|---|---|---|
| SC. No. | 147/2017 | | |
| பெயர் | எஸ். ராஜா | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

(எதிரிகள் ஆஜர் இல்லை. அவர்களுக்கு கு.வி.மு.ச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் தற்போது மணல்மேடு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் 26.02.2016 ஆம் தேதி அன்று பாலையூர் காவல் நிலைய ஆய்வாளராக பணியில் இருந்த போது சிறப்பு உதவி ஆய்வாளர் கோவிந்தராஜ் அவர்கள் நிலைய குற்ற எண்.29/2016 சட்ட பிரிவுகள் 341, 294(பி), 352, 506(ii) ஆகிய பிரிவுகளில் வழக்கு பதிவு செய்து புலன் விசாரணை செய்து வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக என்னிடம் வைத்ததை நான் விசாரணைக்கு எடுத்து கொண்டு 1முதல் 6 சாட்சிகள் ஆன ரகுவர்மா, சேகர், நிர்மலா, இளங்கோவன், ஜெராஜ், குணசேகரன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். அதில் எதிரிகள் கொலை முயற்சியில் ஈடுபட்டதாக தெரிய வந்ததால் 29.02.2016 ஆம் தேதி அன்று சட்ட பிரிவு மாற்ற அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரிவு மாற்று அறிக்கை அ.சா.ஆ.5 ஆகும். எதிரிகளை நீதிமன்றத்தில் முன் ஜாமீன் பெற்று சென்றுவிட்டதால் அவர்களை கைது செய்யவில்லை. இத்துடன் எனது விசாரணையை முடித்து 22.11.2016 அன்று குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன்.

குறுக்கு விசாரணை இல்லை.